செ.வெ.எண். 57/ஜூலை நாள் : 31.07.2016

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் பாரம்பரிய உணவு திருவிழாவை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.**





தருமபுரி மாவட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் பாரம்பரிய உணவு திருவிழா காரிமங்கலம் வட்டம், கெரகோடஅள்ளி, ஜெ.ஜெ அரங்கில் பாரம்பரிய உணவின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாரம்பரிய உணவு திருவிழா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.07.2016) நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பாரம்பரிய உணவு திருவிழா கண்காட்சியை பார்வையிட்டு, சிறுதானிய உணவு வகை குறித்த கையெட்டினை வெளியிட்டு, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதி 103 நபர்களுக்கும், திருமண உதவித் தொகை 28 நபர்களுக்கும், இயற்கை இடர்பாடுகளினால் உயிரிழந்த 2 குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியும், முதியோர் உதவித் தொகை 4 நபர்களுக்கும் ஆக மொத்தம் 138 நபர்களுக்கு ரூ. 18 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பாரம்பரிய உணவு திருவிழா கொண்டாட வேண்டும் என்ற ஆணைக்கிணங்க இன்றைய தினம் தருமபுரி மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய குழந்தைகள் நாளைய தேசத்தை கட்டிக்காப்பவர்கள். இன்றைய வளர் இளம் பெண்கள் நாளைய தாய்மார்கள், இன்று இவர்களின் நலனுக்காக முதலீடு செய்வது நாட்டின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். இதனை நோக்கமாக கொண்டு தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக உயரச்செய்ய வேண்டுமென்பதை இலக்காக கொண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் நோக்கமானது பிறந்தது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை மேம்படுத்துதல். குழந்தைகளின் உடல், மன மற்றும் சமூக ரீதியான வளர்ச்சி முறையான அடித்தளம் அமைத்தளம் அமைத்தல். பல்வேறு கலாச்சார

பின்னணியில் உள்ள நமக்கு நம் முன்னோர்கள் பாரம்பரிய உணவு, உடை, விளையாட்டு, நடனம் ஆகியவற்றை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதே நாம் அனைவரும் அறிந்ததே. மருத்துவமும் விஞ்ஞானமும், நன்கு வளர்ந்து மனிதனின் ஆயுட்காலம் அதிகமாக இருந்தாலும் ஆரோக்கியத்தில் பின் தங்கியுள்ளோம். நாகரீகம் என்ற பெயரால் கம்பு, சாமை, கேள்வரகு, சோளம், குதிரைவாலி, தினை போன்ற ஊட்டச்சத்து மிகுந்த நோய்களை தடுக்கும் உணவுகளை ஏழைகளின் உணவு அவற்றை உண்பது கௌரவ குறை என்பதால் அவற்றை தவிர்த்து அரிசி, மைதா போன்ற உணவுகளை உட்கொள்வதால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி அவதிப்பட நேருகிறது.

இதனால் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இதுபோன்ற பாரம்பரிய உணவு திருவிழாவினை தமிழக அரசின் மூலம் நடத்தி பாரம்பரிய உணவின் மகத்துவம் அதன் அவசியத்தை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உணவு பழக்க வழக்கங்களில் நல்லதொரு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த சமூதாயத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும். குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்றும் நோய்படுதலை குறைத்தல் வேண்டும். எனவே நமது எதிர்கால சந்ததினர் நோய் இல்லாமல் வாழ பாரம்பரிய உணவுகளை அன்றாடம் உட்கொள்ளும் வழக்கத்தை பின்பற்ற வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு நாம் பழக்கப்படுத்த வேண்டும்.

பாரம்பரிய உணவு வகைகளை நினைவு கூறும் வகையில் சிறுதானியங்களின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் பாரம்பரிய உணவு திருவிழா அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. நமது தருமபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், தருமபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 4 வட்டாரங்களில் இவ்விழா சிறப்புர நடைபெறவுள்ளது என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் திட்ட அலுவலர் திருமதி. எ. பத்மாசனி அனைவரையும் வரவேற்று பேசினார். முடிவில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் காரிமங்கலம் செல்வி. ஸ்ரீசுகந்தப்ரியா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், மாநில பட்டு கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. எம்.ஜி. மணிவண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், காரிமங்கலம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. கே. தமிழ்ச்செல்வி குமார், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை மாவட்ட நியமன அலுவலர் மரு. ஆர். பிருந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.